RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s538

# சீர்மயச் சிந்தையில் சிவவாக்கியர்

## சு. கார்த்திகேயன் [அ, *]

[அ] தமிழ்த்துறை, பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி, எல்லீஸ்பேட்டை, ஈரோடு- 638116, தமிழ்நாடு, இந்தியா

# Thoughts of Awakening by Sivavakkiyar

## S. Karthikeyan [a, *]

[a] Department of Tamil, Bharathidasan College of Arts & Science, Ellispettai, Erode-638116, Tamil Nadu, India

* Corresponding Author: karthikmaniyam@gmail.com

Received: 12-07-2021
Revised: 25-06-2022
Accepted: 06-07-2022
Published: 25-08-2022

Check for updates

**ABSTRACT**

Intellectual thoughts and memories have existed in Tamil literary contexts from the very beginning. Moreover, the Siddha literature is full of criticism of superstitions, physical realism, anti-idolatry, anti-Manu, anti-false rituals, and encouragement of virtuous deeds. For the sake of simplicity, this article can analyze the rational ideas embodied in Sivavakkiyar's poems within the three categories of thought, word, and deed. The word "Dravidian" and its principles are not intended to scratch the feelings of the individual. It is a denunciation of slavery, the concentration of power, and superstitions. Such qualities can be seen in the spiritual box, as a form of rationalism, as an anti-caste and anti-religious key, as a woman's reverence, as the peeling sun of false ascetics, and as the saffron that celebrates the body and mind.

**Keywords:** Sivavakkiyar, Dravidian, Tamil Literature, Rationalism

## முன்னுரை

எண்ணம் என்பதற்கு நோக்கம், சிந்தனை, யோசனை, கணக்கு நினைவு என்று விக்கிபீடியாவும், “ஆலோசனை, இறுமாப்பு, கருத்து, கனம், கிலேசம், குறிப்பு, நம்பிக்கை, நினைவு, நோக்கம், மதிப்பு, விசாரம்” என்று தமிழ்மொழி அகராதிக் கூறுகின்றது (Kathirvelpillai, 2011).

மேற்கண்டவைகளின் சாரமாக சிந்தனை என்பதனை எடுத்துக் கொண்டு சிவவாக்கியரின் சித்தர் பாடல்களைக் காணும் போது, மனம், மற்றும் அதன் செயல்பாடுகளாகக் குறிப்பிட்டுள்ளவற்றை பகுத்து எண்ணங்கள் என்ற இப்பகுதிக்குள் இடுவது பொருத்தமாகக் கருதுகிறேன்.

## நற்சிந்தனை

“எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்”

எண்ணங்கள் நல்லதாக இருக்கும் போது தான் செயல்களும் அதனை முன்னிறுத்திய வாழ்க்கையும் சிறப்பானதாக அமையும். சிவவாக்கியரின் பாடல்களில் மனத்தூய்மை குறித்த பதிவுகள் கணிசமான எண்ணிக்கையில் அமைந்துள்ளன (Seenivasan, 2012).

## மனம்

இறைவனை மனதால் நினைக்காமல், காலையிலும், மாலையிலும் நீராடுவது பக்தியாகாது எனவும், மனதில் காமம், வெகுளி, மயக்கம் போன்ற அழுக்குகள் நீங்காமல் எத்தனை பெரிய தவங்கள் புரிந்தாலும் பயன்படாது. அதுவே இல்லறத்தில் வாழ்பவன் மனத்தூய்மையாக இருந்தால் பிறவிப் பயனை அடையலாம் என்பதை,

"மனத்தகற்று அழுக்காறா மௌன ஞான யோகிகள்

வனத்தகற்று இருக்கிணித் மணத்தகற்று அழுக்காறார்"

என்ற அடிகளில் அறிவுறுத்துகிறார் (Seenivasan, 2012). வள்ளுவரும் வினைத்திட்பம் என்னும் அதிகாரம் முழுவதிலும் மனதின் செயல்களையும் தன்மைகளையும் விளக்கி உரைக்கின்றார். ஆகவே எந்தவொரு செயலையும் நல்லமுறையில் தொடங்கவும் நிறைவாக முடிக்கவும், நற்சிந்தனை அவசியமானது என்பதை உய்த்துணர வேண்டும்.

## அறிவு

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு"

அறிவு என்பது நுணுகி ஆராய்ந்து உண்மைப் பொருளைக் காண்பது என்பது வள்ளுவரின் கருத்து. சிவவாக்கியரும் அவரது வழியிலேயே பயணிக்கவும் செய்கிறார் (Murugan, 2014). (147, 151, 188, 277, 496, 520) போன்ற பாடல்களில் அறிவுநிலை குறித்து விவாதிக்கின்றார். எல்லாப் பொருள்களுக்கான தோற்றம் தெரிகிறது. ஆனால் அது எங்கு சென்று மறைகின்றது என்பதை உணரமுடியவில்லை. ஒளி தெரிகிறது. ஆனால் அதை உருவாக்கிய சொல் எப்படி பிறந்தது என்று தெரியவில்லை. அதனை எல்லாம் உணர்வது தான் அறிவு என்றும் கற்ற நூல்களும் உணர்ந்த கல்வியும் மணந்த மனைவியும், பிறந்த பிள்ளையும் சேர்ந்த உறவுகளும் ஆகியவை அனைத்துமே ஒரு காலத்தில் தூக்கத்தில் அனைத்தையும் மறப்பது போல மறக்கப்பட வேண்டியவர்கள். அப்படி மறந்த பின் அவை எங்கு சென்று மறைகின்றன அல்லது அவை எங்கு சென்று நிறைகின்றன என்பதை யாரும் அறிய முடியவில்லையே என்று கேள்வி எழுப்புகின்றார். அத்தோடு,

"அணுவினோடு அகண்டமாய் அளவிடாத சோதியைக்

குணமதாக உம்முளே குறித்து நோக்கின் முக்தியாம்"

அணுவிற்குள் அணுவாய் அகண்ட வெளியாய் அளவிட முடியாத படி இறைவன் ஒளி வடிவமாக இருக்கிறான். அத்தகைய இறைவனை உமக்குள் நன்கு விளங்குமாறு நோக்கினால் அதுவே முக்திநிலை. இதை விட்டு மந்திரங்கள், பூசைகள் செய்வது பயனற்றது என்கிறார். இறைவனை உனக்குள் தேடு என்று கூறிய சிவவாக்கியர் அடுத்த பாடலில் கூடுதலாக சில படிகள் ஏறிச் சென்று நானும் அல்ல நீயும் அல்ல இறைவன் அல்ல என்று கூறுகிறார். அதாவது இறைவன் என்பவன் உலகில் கிடையாது, மனிதன் என்பவனும் கிடையாது. மிருகம் என்பதும் கிடையாது என்கிறார். மூன்று பொருளும் உண்மையில் ஒரு பொருளே ஆகும். மூன்றாய் பிரிவடைகின்றது. கடவுள் என்பதை பெயர்ச்சொல்லாக கருதாமல் வினைச்சொல்லாக்கி கடுஉள் - உள்ளிருந்து கடந்து செல், என்னும் பொருளில் சுயநலத்திலிருந்து கடந்து பொதுநலம் நிரம்பியவன் எவனோ அவனே கடவுளாகவும், எதிர்மறையாக சுயநலத்தால் சுடரிழந்தவன் மிருகநிலையையும் அடைகிறான் என்னும் பொருண்மையைச் சிவவாக்கியர் நமக்குத் தருகிறார் (Tamil Priyan, 2014).

## அறம்

அறம் என்ற சொல்லுக்கு "கையறம், கருமம், நீர்மை, நூற்பயன், பெரியோரியல் பின்னொன்று" என்று தமிழ்மொழி அகராதி கூறுகிறது (Kathirvelpillai, 2011). பொதுவாகவே அறம் என்பதற்கு தர்மம்

என்றும் நல்ல செயல்கள் என்றும் தீயவற்றை அருக்கும் குணம் கொண்டது என்றும் பொருள், நம் பொது புத்தியில் உண்டு. ஆடு நாடு யானைபடை முதலியவை தேடினாலும் செல்வத்தை நிரம்ப சேர்த்தாலும் இவை அனைத்தும் நாம் இறந்தபின்பு நம்முடன் வருவதில்லை. ஆனால் பிறருக்குத் தானாக இட்டபிச்சையும், மகிழ்ச்சியோடு செய்த புண்ணியச் செயல்களும் எப்போதும் நம்மோடு வருகின்றது. என்பதை,

"ஓடியிட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்

சாடிவிட்ட குதிரைப் போல் தர்மம் வந்து நிற்குமே"

என்ற வரிகளில் விளக்குகிறார் (Tamil Priyan, 2014). அத்தோடு பொய் கூறுபவர்கள் அதனை ஒரு நல்ல தந்திர யுக்தி என்று நினைப்பதால் உண்மையாகப் பேசுபவர்களும் பேசுவதை மறக்கின்றனர் என சிவவாக்கியர் (275) கூறுவதன் மூலம் வாய்மை என்பது சொல் அளவிலான அறச்செய்கை என்பது புலப்படுகிறது. மேலும் உயிர்க்கொலை, பொய்க்கூறல், திருட்டு செய்யும் உலகில் அறம் செய்பவர்கள் (276) இறைவனாக வாழ்பவர்கள் என்பது சிவவாக்கியரின் எண்ணமாகும்.

## அற்சிந்தனை

நல்லது அல்லாத சிந்தனைகள் நமக்கும் நம்மைச் சார்ந்த சமுதாயத்திற்கும் துன்பத்தை ஏற்படுத்துவதால் அதனை அற்சிந்தனை என்று கூறலாம். ஆரோக்கிய வாழ்விற்கு தேவையற்ற ஆசை, வேற்றுமை உணர்வு ஆகியவற்றை விட வேண்டும் என்பதை சிவவாக்கியரின் பாடல்களின் வரி விளக்குவதே இப்பகுதியின் நோக்கமாகும்.

### ஆசை

பொருள்களின் மேற்கொள்ளும் நசையும், உறவுகளை மேற்கொள்ளும் நாட்டமும் அளவு கடந்து போகும் பொழுது ஆசையாய் பரிணமிக்கிறது. புத்தர் முதலான ஞானிகளும், சித்தம் தெளிந்த சித்தர்களும் ஆசையே அனைத்து வகையான துன்பத்திற்கும் காரணியாக அமைவதாகக் கூறுகின்றனர். சிவவாக்கியரும்,

"ஆசைக் கொண்டு அனுதினமும் அன்னியர் பொருளினை

மோசம் செய்து அபகரிக்க முற்றிலும் அலைபவர்"

பிறரின் பொருள் மீது ஆசைகொண்டு அதனைப் பறிக்க எண்ணுபவர்கள் எத்துணை பூசை செய்து வாழ்ந்தாலும் அது சிறப்பான வாழ்வாகாது. அத்தோடு பருவம் எய்திய பெண்கள் மீது ஆணுக்கு ஆசை வருவது இயற்கை என்றும், அது தவிர்த்த பிற ஆசைகள் எல்லாம் மிகுந்ததுன்பத்தைத் தருவதாகவும் (522) சிவவாக்கியர் கூறுகிறார். பொதுவாக சமூக சூழலில் இயற்கையாக எழும் ஆசைகளைத் தவிர்க்கவும், ஆடம்பரத்திற்கான ஆசைகளை நீக்கவும் சிவவாக்கியர் விளம்புகிறார் (Tamil Priyan, 2014).

### வேற்றுமை

மனித குலத்தின் தொடக்கத்தில் இருந்த ஒருமைப்பாடு அதன் வளர்ச்சியின் பாதையில் பல்வேறு விதமான வேறுபாடுகளையும், பிளவுகளையும் சந்திக்க நேரிட்டது. சாதிய வேறுபாடுகளும், ஆண் பெண் வேறுபாடுகளும் சமுதாயத்தில் இழையோடியிருந்த சூழலைத் தமது பாடலில் பதிவிடுவதோடு, அதனை எதிர்த்து குறல் எழுப்பவும் செய்கிறார்.

## குலவேறுபாடு

"பிறப்புக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா

செய்தொழில் வேற்றுமை யான்"

என்ற குறட்பாவில் வள்ளுவர், உலகில் பிறந்த அனைத்து உயிர்களும் ஒன்று தான் (Tamil Priyan, 2014). தொழில் காரணமாக பிளவுபட்டும், சிறப்பு பெற்றும் இருக்கின்றன என்கிறார். தொழில் காரணமாக தொடங்கிய பகுப்பு முறைகள் பிற்கால கட்டங்களில் மனித உறவுக்கும் உரிமைக்கும் ஆகி வந்து விட்டது. அதனை களைய வேண்டியது பகுத்தறிவின் முதற்படி என்பதை

"பறைட்சியாவது ஏதுடா பணத்தியாவது ஏதுடா

இறைச்சி தோல் எலும்பினும் இலக்கமிட்டு இருக்குதோ"

என்ற பாடலில் தாழ்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்த பெண்ணுக்கும் உயர்த்தப்பட்ட குலத்தைச் சார்ந்த பெண்ணுக்கும் இருக்கும் எலும்புகளும், சதைகளும் ஒன்று தான். அனைவரும் சமமானவர்தான். இதில் வேறுபாடு காண்பவர் மூடர் என்கிறார் (Tamil Priyan, 2014). அது போலவே ஏரி, குளம், ஆறு, கிணறு, குட்டை, கடல் என்கிற பல பெயர்கள் இருந்தாலும் அனைத்துமே நீர்நிலைகள் தான் என்பதை போல மனிதர்கள் அனைவரும் சமமானவர். (46) என்பதை உணரவேண்டும். ஞானிகள் என்பவர்கள் முதலில் சாதியத்தைக் களைந்தவர்களாகவும், கடந்தவர்களாகவும் இருப்பவர்கள் தான் (216. 334) என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அத்தோடு,

"மேதியோடு ஆகுமே விரும்பியே புணர்ந்திடில்

சாதி பேதமாய் உருத்தரிக்கும் ஆறு போலவே"

என்ற பாடலில் சிவவாக்கியர் விலங்குகளில் இன வேறுபாடுகள் காரணமாக மாடும் எருமையும் புணர்ச்சி கொள்ள இயலாது. ஆனால் குலத்தால் வேறுபட்ட ஆணும் பெண்ணும் புணர்ந்து அதன் பயனான பிள்ளைப் பேற்றைப் பெறஇயலும். இந்த உண்மையை உணர்ந்து கொண்டால் குலவேற்றுமை இயற்கைக்கு முரணானது என்பதைத் தெரிந்து கொள்ளமுடியும் என்கிறார் (Tamil Priyan, 2014).

### இன வேறுபாடு

ஆண், பெண் என்ற பாலின வேறுபாடு தாய்வழிச்சமூகம் தொடங்கி நவீன காலம் வரையிலும் அதன் தன்மையும், விகிதாச்சாரமும் மாறுபட்டாலும் இருந்தபடியே உள்ளன. அவற்றைக் களைவதற்கும் சித்தர்கள் முயன்றுள்ளனர். சிவவாக்கியர்,

"தூமை தூமை என்றுளே துவண்டு அலையும் ஏழைகாள்

தூமையான பெண்ணிருக்க தூமை போனது எவ்விடம்"

பெண்களைத்தீட்டு என்று ஒதுக்கி வைக்கும் சமுதாயத்திற்குச் சாட்டையடி கொடுக்கிறார் (Tamil Priyan, 2014). பெண்கள் இருக்கும் அறையில் புகுவது தீட்டு, அவள் குளித்த அறைக்குச் செல்வது தீட்டு பிள்ளைப் பெற்ற பெண்ணின் உடலும் தீட்டு, இறந்த பெண்ணின் உடலும் தீட்டு (48), அந்தத் தீட்டைப் போக்கிக் கொள்ள ஆமைபோல நீரில் மூழ்கி (49), கல்வி கற்ற குருக்கள் தங்கள் வாயினால் மந்திரங்கள் ஓதிவிட்டு தீட்டைப் போக்கியதாகச் சொல்லுவதும், புண்ணியராகக் கருதப்படும் அந்த குருக்களும் கூட தீட்டாகக் கருதும் இந்த தூமையிலே (50, 133, 135, 136, 138), உருவானவர்கள் தான் என்பதை உணர வேண்டும் என்கிறார்.

## சொல்

சொல் நிலையிலான சமுதாயச் சீர்திருத்தக்கருத்துக்களைச் சிவவாக்கியரின் பாடல்களில் காண்பதே இப்பகுதியின் நோக்கமாகும். மௌனத்தின் சிறப்பு, வேதமறுப்பு, மனு எதிர்ப்பு போன்ற கூறுகள் இப்பகுதியில் அமைகின்றன.

## மௌனத்தின் சிறப்பு

சலனம் இல்லாத ஆழ்கடலைப் போன்ற அமைதியான மௌனம் தெளிவான சொல்லை பிரசவிக்கும் கருவறை ஆகும். இதனை உணர்ந்த பகுத்தறிவினர் தேவையற்ற பேச்சுகளைத் தவிர்க்கவும், சுருக்கமாக பேசவும் செய்தனர். சிவவாக்கியர்,

"ஆண்மையாண்மை ஆண்மையாண்மை ஆண்மை கூறும் அசடரே

காண்மையான ஆதிரூபம் கால கால காலமும்"

தேனீக்கள் இல்லாத தேனைப் பருகுவது போலவும், சுறுசுறுப்பைத் தரும் அத்தேனானது எதிர்மறையாக உறக்கத்தைத் தருவது போலவும், பாய்மரம் இல்லாத கப்பலில் பயணம் செய்வது போலவும் பொருள் இல்லாததாகும் (Tamil Priyan, 2014). அது போலவே மௌனத்தின் சிறப்பினை வாய்ச்சொற்களால் கூறுவதும் பொருந்தாது. மௌனம் என்பது உணரவும், உணர்த்தவும், வேண்டிய வல்லமைப் பொருளாகும் (252), அத்தோடு ஆளுமைத் தன்மையை அதீத உணர்வாகக் கொண்டு பாலினத்தின் அதிகார வர்க்கமாக செயல்படும் ஆண்கள், ஆண்மை என்று கூறி மார்த்தட்டும் போக்கு இருக்கிறது. ஆனால் உண்மையில் ஆண்மை என்பது மனதால் நன்கு உணர்ந்து மௌனமாக இருப்பதுதான் என்று சித்தர் கூறுகிறார்.

## வேதமறுப்பு

மக்களின் உணர்வுகளை வன்மையாக உரசுகின்ற சடங்குகளின் தொகுப்புகளான வேதங்களைப் பகுத்தறிஞர்கள் எதிர்த்து வந்தமையும் மரபின் தொடர்ச்சியாகும். அவ்வழியில் சிவவாக்கியரும் தனது எதிர்ப்புகளை

"வாயிலே குடித்த நீரை எச்சில் என்று சொல்லுறீர்

வாயிலே குதப்பும் சொல் வேதம் என படக்கடவதே"

"ஓதுகின்ற வேதம் எச்சில் உள்ள மந்திரங்கள் எச்சில்"

தமது பாடல்களில் வெளிப்படுத்துகிறார் (Tamil Priyan, 2014). வாயில் உள்ள நீரினை எச்சில் என்று ஏசுகின்ற சமுதாயம் எச்சிலில் மிதக்கின்ற மந்திரங்களை வேதம் என கூறுவது புதிராக இருக்கிறது. அத்தோடு வாயினால் ஓதுகின்ற வேதம், உண்ணும் உணவு, ஏழு உலகங்கள், பெண்ணிடம் செலுத்திய விந்து, அறிவு, ஓசை, அனைத்துமே எச்சில்தான் என்பது சிவவாக்கியரின் கருத்தாகும். உலகில் உயர்ந்த கருத்துக்களைக் கொண்டவை என்றும் உயர்த்தப்பட்ட வகுப்பினர் கற்பது மற்றும் கற்பிப்பது என்றும் கருதப்படுகின்ற வேதத்தினை அக்காலச் சூழலில் மறுத்திருப்பது சித்தத்தின் மெய்மைத் தன்மையைக் காட்டுகிறது.

வேதத்தினை மட்டுமல்ல வேதியர்களைக் குறித்தும் அவர்களின் உணவு முறைகளை குறிக்கும் சிவவாக்கியர்

"மீனிறைச்சி தின்றதில்லை அன்றும் இன்றும் வேதியர்

மீனிருக்கும் நிரலோ மூழ்குவதும் குடிப்பதும்"

தமது பாடல்களில் வேதியர்கள் எப்போதும் மீன் இறைச்சியை உண்பதில்லை என்றாலும் மீன் வாழும் நீரில் தான் குளிக்கின்றனர், அதையேதான் குடிக்கின்றனர், மானிறைச்சி உண்பதில்லை (Tamil Priyan, 2014). ஆனால் மான் தோலில் தான் பூணூல் அணிகின்றனர். ஆட்டுறைச்சி உண்பதில்லை. ஆனால் வேள்வியிலே அதனை பலியிடுகின்றனர். மாட்டுறைச்சி உண்பதில்லை. ஆனால் காய்கறிகளுக்கு உரமாக அதனை பயன்படுத்துகின்றனர் (159), ஆகவே வேதியர்கள் இறைச்சி உண்பதில்லை என்ற போதிலும் உயிர்களைக் கொல்வதற்கு காரணமாக அமைவதால் உயர்வானவர்களாக அவர்களைக் கருதமுடியாது. அத்தோடு வேதம் ஓதும் வேலையானது வீணானது அந்த ஒளிகள் ஒருபோதும் பல மையில் தொலைவு சென்று பயன்தருவதில்லை (526), ஆகவே வேதமும் வேதியர்களும் அவர்களால் செய்யப்படுகிற பணியும் பயனில்லாதது ஆகும்.

## மனு எதிர்ப்பு

சமுதாய நீதிக்கு எதிரானதாகக் கருதப்படுகின்ற மனு தர்மத்திற்கு வள்ளுவர் முதலான அறிஞர்கள் எதிரொலி எழுப்பியுள்ளனர். சிவவாக்கியரும்,

"அணுதிரண்ட கண்டமாய் அனைத்து பல்லியோனியாய்

மனு பிறந்து ஓதிவைத்த நூலிலே மயங்குறீர்"

தமது பாடலில் மனுதர்மம் என்று எழுதப்பட்ட நூலில் சாதி, மத சமூக வேறுபாடுகள் வகுக்கப்பட்டுள்ளன. அதைப் படிக்கும் மக்களும் அதனை பின்பற்றுகிறார்கள். ஆனால் அணுக்கள் பலவும் ஒன்று சேர்ந்து உடலானது உருவாகின்றது. அப்படி சேர்ந்த அணுக்கள் எல்லாம் உயிர்பெறுவதில்லை. எஞ்சிய உயிரும் உடலும் சேர்ந்து உருவான மனிதனுக்குள்ளே மனு எப்படி நுழையமுடியும். ஆகவே மனு என்பது உண்மைக்கு எதிரானது என்கிறார் (Tamil Priyan, 2014).

## செயல்

எண்ணங்களும், அவ்வெண்ணங்களால் ஒலி பெறுகிற மொழிகளும் வடிவம் பெறுவது செயல்களால்தான். அச்செயல்கள் வாழ்வியலை நிர்ணயம் செய்ய வல்லதாகிறது. கருத்து எளிமைக்காக செயல்கள் என்னும் பிரிவு பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், மற்றும் சடங்குகள் என்ற முறையில் பகுத்து இப்பகுதி ஆய்கிறது.

### பழக்கவழக்கங்கள்

செயல்கள் தொடர்ச்சியாகவும், முறைப்படுத்தப்பட்டும் செய்யப்படும் பொழுது அது பழக்கமாகிறது. அப்பழக்கத்தின் தொடர் முறையால் அது பெருமூளையின் நேரடித் தொடர்பின்றி நடைபெறும் அளவில் வழக்கமாகிப் போகிறது. வழக்கமாகிய செயல்கள் மனிதனின் கட்டுப்பாடுகள் இல்லாமலேயே நடைபெறும் தன்மை கொண்டவை. எதற்காக செயல்படுத்துகிறோம் என்ற பகுத்தாய்வு இல்லாமல் நடைபெறுவது இப்பகுதியில் உடலை பராமரிக்கும் உணவுகளைத் தெரிவு செய்யும் போக்கும் மூச்சு பயிற்சி முறைகளும் உடல் பற்றிய அறிவியல் உண்மைகளும் ஆராயப்படுகிறது.

#### உணவுத்தெரிவு

உணவு வகைகளில் சைவம் உயர்வானது. அசைவம் தாழ்வானது, ஏனென்றால் உயிர்களைக் கொன்று உண்பது என்ற கருத்துக்கள் சமண கொள்கையிலும் இந்துத்துவக் கொள்கைகளிலும் இருக்கின்றது. புனிதம் கருதியோ அருவருப்பு கருதியோ சில உயிர்களைக் கொல்லுவதும், புசிப்பதும் கூடாது என்று சில மதங்கள் கருதுகின்றன. ஊனைத் தின்று ஊனைப் பெருக்காமை நன்று என்று இன்னாநாற்பதும் அதே போல,

"அறவினை யாதெனில் கொல்லாமை கோரல்

பிறவினை எல்லாம் தரும்"

என்று திருக்குறளும் உயிர்களைக் கொல்லுவதும், அதை உண்ணுவதும் அறமற்ற செயல்களாகக் கருதுகின்றன (Bavanidasan, 2015). ஆனால் அறிவியல் உலகம் பல்லுயிர் பெருக்க கட்டுப்பாட்டிற்கும், சூழலியல்நிலை வளமைபெறுவதற்கும் உணவுக் காரணத்திற்காக உயிர்கள் கொல்லப்படுதலும் உண்ணப்படுதலும் இயற்கையான நிகழ்வாகப் பார்க்கிறது. சிறுதெய்வ வழிபாட்டிற்காக உயிர்கள் பலியிடுதலைக் கண்டிக்கிற சிவவாக்கியர், உணவுக்காக உயிர்கள் கொல்லப்படுதலை நியாயப்படுத்துகிறார். அத்தோடு சைவ உணவு உண்ணுவதால் மட்டும் ஒருவர் புனிதர் ஆகிவிட முடியாது என்பதையும் தெளிவுறுத்துகிறார். புலாலை இழிவாகப் பேசுபவர்களை சிவவாக்கியர்,

"மதிரமாக விட்டதேது மாமிச புலாலதென்று

சதிரமாய் வளர்ந்ததேது சைவனார மூடரே"

தம் பாடல்களில் ரத்தம் உடலில் ஏற்படும் இரசாயன மாற்றத்தால் பாலாகிறது (Tamil Priyan, 2014). அதை குடித்தே குழந்தைகள் வளர்கின்றது. ரசமாக இருக்கும் பொருள் தான் விந்துவும் முட்டையும் அதில் சுவையும் இல்லை. ஆனால் அவை தான் மனித இனம் பெருக்கமடைய காரணம். சிந்தித்து பார்த்தால் திறமையான புலால் தான் அவை இரண்டும் என்பதை உணர முடியும். அத்தோடு அசைவத்தை இழிந்து பேசுபவனும் அதனை வெறுப்பவனும் புலாலால் உருவானவன் என்பதை மறக்கக் கூடாது (148), மீன், மான், ஆடு, மாடு போன்றவற்றை உணவாக எடுத்துக் கொள்ளாதவரும் அதனைக்கொல்லுவதும் புனித வேடம்தரிப்பதும் விந்தையானது (158, 159), என்று கூறுகிறார்.

## உடல் பராமரிப்பு

உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே என்று திருமூலர் கூறுகின்றார். உடல்நலம் வாழ்வு நலம் என்று அறிவியல் கருதுகின்றது. அப்படியான உடல் பற்றிய புரிதல்தான் அதனை பராமரிக்கும் தன்மைக்கு முதற்படி என்பதை உணர்ந்த சிவவாக்கியர்,

"மச்சரத்துலே இவர்ந்து மாயப்பேசும் வாயுவை

அச்சகத்துலே இருந்து அறிஉணர்த்தி கொள்விரேல்"

தனது பாடலில் உடல் என்பது பல்வேறு தசைகளாலும், எலும்புகளாலும் ஆனது. அதற்குள்ளே காற்றானது இயங்குகிறது. அதனை நாம் உணரவேண்டும் என்பதோடு உடலானது உப்பால் ஆனது அதனை நீக்கினால் அது அழுகிப் போய்விடும் (523), என்பதையும் கூறுகிறார் (Tamil Priyan, 2014).

இத்தகைய பண்பு கொண்ட உடலைப் பராமரிப்பதில் மூச்சுக்காற்றை முறைப்படுத்துதல் முக்கியமானது. நமது மூச்சு காற்றானது இடகலை, பின்கலை, சுழுமுனை எனும் நாடிகளில் சன்னல் பின்னலாக ஓடிக் கொண்டிருக்கிறது. இப்படியாக ஒவ்வொரு சுவாசத்திலும் மூச்சுக் காற்றிலிருந்து 4 அங்குலம் வீணாகிறது. அதனால் நோய், முதுமை ஏற்பட்டு வாழ்நாளும் குறைகிறது என்பதை,

"சங்கிரண்டு தாரை ஒன்று சன்னல் பின்னல் ஆகையால்

மங்கி மாளுதே உலகில் மானிடங்கள் எத்தனை"

என்ற பாடல் விளக்குகிறது (Tamil Priyan, 2014). அத்தோடு நமது உடல் 24 தத்துவங்களால் ஆனது என்றும் அதில் வாதம் முதலிய 14 நாடிகளும் 10 வகையான வாயுக்களும் (218) தொழில் புரிவதாகவும் சிவவாக்கியர் விளக்குகிறார்.

## நம்பிக்கைகள்

நம்பிக்கைகள் என்பது தொடர்ந்த வழுக்காறுகளின் மேல் கொண்ட மதிப்பு என்றும் உளவியல் சார்ந்த எண்ணங்களின் தொகுப்பு என்றும் ஒருவாறு வரையறை செய்யலாம். நம்பிக்கைகள் அது ஏற்படுத்தும் விளைவுகளைப் பொறுத்தே அறிவு சார்ந்து நம்பிக்கை அறிவுக்குப் பொருந்தாத மூடநம்பிக்கை என்றும் பரிணமிக்கின்றன. சிவவாக்கியரின், பாடல்களில் வாழ்வியலைச் சீர்ப்படுத்தும் அறச்செயல்களும் அதனை கட்டுப்படுத்தும் நெறிகளான வழிபாட்டு முறைகளும் அதற்கொத்த இல்லறநடத்தைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன. பொதுவாகவே தமிழரின் வாழ்வானது இளமையில் கல்வி சார்ந்தும், இடைக்காலத்தில் இல்லறவாழ்வு சார்ந்தும் முதுமையில் துறவு நோக்கியதுமான கொள்கையுடையது. அதாவது கல்வியும் செல்வமும் இல்லறமும் அதன் பின் துறவு வழியில் இளையர்களுக்கு வழிவிடும் தன்மையிலான வீடுபேறும் அமைகின்றது. இதன் உண்மைத் தன்மை உணராதவர் துறவறமே சிறந்தநிலை என்று கருதியதைக் கடியும் விதத்தில் சிவவாக்கியரின் பாடல்கள் அமைந்துள்ளன.

## அறம்

அறம் என்ற சொல்லுக்கு “கடமை, தர்மம், கற்பு, இல்லறம், துறவறம், புண்ணியம் என்று கழகஅகராதி பொருள் தருகிறது” (Sagadeva Muthaliyar, 1997). மனித வாழ்விற்கு வளம்தரும் நல்ல நடத்தைகளை அறம் என தெளியலாம். சிவவாக்கியரின் பாடல்களிலும்

“ஓடியிட்ட பிச்சையும் உகந்து செய்த தர்மமும்”

“மன்றினூடு பொய் களவு மாறு மாறு செய்யினும்”

செல்வங்களையும் அதிகாரங்களையும் சேர்த்து வைத்திருந்தாலும் இறந்த பின்பு உடன் வருவது நாம் செய்தஉதவியும் அறங்களும்தான் (Tamil Priyan, 2014). அத்தோடு, பொய்கூறுவதும் பிறர் பொருள் மேல்விருப்பம் கொண்டு களவாடுதலும் மதிப்பிழக்கச் செய்யும் செயல்கள் என்பதை உணர்ந்து உயிர்க்கொலைகளைத் தவிர்த்து கடினமாக இருந்தாலும் உண்மையைப் பேசி வாழ வேண்டும்.

## உருவவழிபாடு

வழிபாடு என்ற சொல் வழிப்படு என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகும். பின்பற்று நெறிப்படுத்து என்ற சொற்களோடு தொடர்புடையது. இலக்கியவகையில் காணும்போது அச்சத்தின் காரணமாக வழிபாடு தொடங்கியது. மனதினை மையப்படுத்தவே முதலில் உருவவழிபாடு தொடங்கியது. காலப்போக்கில் வழிபாடுகளில் மனது என்பதே துளைந்து போனது துயரம். அத்துயரத்தை சிவவாக்கியர்,

“செம்மைசேர் மரத்திலே சிலை தலைகள் செய்கிறீர்

கொம்மையற்ற கிளையில் பாதக்குறடு செய்து அளிக்கிறீர்”

செம்மையான மரங்களால் சிலைகளையும், தெய்வத்தின் தலைகளையும் செய்து வழிபடுகிறீர்கள் (Tamil Priyan, 2014). கிளைகளை வெட்டி பாதக்குறடு செய்து மரங்களையெல்லாம் அழிக்கிறீர்கள் செம்பினால் கட்டையால் கல்லினால் மட்டையால் மஞ்சளால் சாணியால் செய்த உருவம் தெய்வம் ஆகுமோ (533), தெய்வங்கள் கல்லாக இருக்குமா இந்தச் செயல் நகைப்பைத் தருகிறது (130), என்று புலம்புகிறார். அத்தோடு கல் முதலான பொருள்களால் நாமே செய்து வைத்து உருவத்தை வணங்குவதும், பூசைகள் செய்வதும் அப்பொருள் நமக்கு வேண்டுவன செய்யும் என்று நம்புவதும் மூடத்தனத்தின் உச்சமாகும். (130, 236, 243, 433, 499, 503, 519, 533, 543) என்று கருதுகிறார்.

## சடங்குகள்

சடங்குகள் என்பது சமயங்களின் வழியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்வியல் முறையாகும். பிறப்பு தொடங்கி இறப்பு வரையிலான எண்ணிறந்த சடங்குகள் மனிதகுலத்தில் அவர்களது சமயங்களைப் பொறுத்து அமைகிறது. வளமைச் சடங்குகளில் வழிபாட்டு முறைகளும் வாழ்வியல் சடங்குகளில் பிறப்பு இறப்பு சடங்குகளும் அமைகிறது. சிவவாக்கியர் பாடல்களில் வழிபாட்டு சடங்குகளில்

“அள்ளி நீரை இட்டதேது அகங்கையில் குழைத்ததேது

மெல்லவே மிணமிணவென்று விளம்புகின்ற மூடர்காள்

நீரிலே குளிக்கும் போதும் அந்த நீரை கையில் எடுத்து மந்திரங்கள் சொல்லும் போதும் கண்கள் மூடி சடங்குகளைச் செய்யும் பொழுதும் அது போலியானது என்பதை மூடர்கள் உணர்வதில்லை (Tamil Priyan, 2014). இத்தகைய போலி துறவிகள் வெள்ளியைப் பொன்னாக்குகின்றேன் பணம் தாருங்கள் என்று ஏமாற்றும் பொய்யர்கள் (537), இவர்கள் வீடு பேறு தருவதாக கூறி தங்கள் வயிற்றை நிரப்பிக்கொள்பவர்கள் (542), பல சடங்குகளையும் சித்து வேலைகளையும் செய்து கஞ்சா போன்ற போதைப் பொருட்களையும் திண்பவர்கள் (539), பெண்களின் மேல் ஆசைக்கொண்டவர்கள். இவர்கள்

எல்லாம் பிற்காலத்தில் நிம்மதி இழந்து இறந்துபோவார்கள் (538), என்று சாபம் இடுகின்றார். மக்களில் பெரும்பான்மையோர் தங்களுக்கு உண்டான நோய்களைத் தீர்ப்பதற்குக் கடவுள் உதவிசெய்ய, உயிர்ப்பலி கேட்பதாகக் கருதிக்கொண்டு சிறுதெய்வங்களுக்கு ஆடு, கோழி போன்ற உயிர்களைப் பலியிடுவதைச் சடங்குகள் ஆக்கிக் கொண்டிருக்கின்றனர். அது தவறான வழிபாட்டு முறை என்பதை,

"தங்கள் தேகம் நோய்பெரின் தனைப்பிடாரி கோயிலில்

பொங்கல் வைத்து ஆடு கோழி பூசைப்பலியை இட்டிட"

சிவவாக்கியர் கூறுவது சிறப்பாகும்.

"ஈனெருமையின் கழுத்தில் இட்ட பொட்டணங்கள் போல்

மூணுநாலு சீலையில் முடிந்தவிழ்க்கும் மூடர்காள்."

என்ற பாடலில் வாழ்வியல் சடங்குகளில் ஒன்றான இறப்பு சடங்கு குறித்து சிவவாக்கியர், மனிதர்கள் இறந்த பிறகு பாடையிலே பிணத்தின் கழுத்தில் உணவு பைகளை கட்டித்தொங்கவிடும் பழக்கம் இருந்தது. அது இறந்தவர் மேலுலகம் செல்லும் வரைக்குமான கட்டுணவு என்று கருதினர். ஆனால் அவர்கள் இறந்த பிறகு உடல் எங்கும் செல்லாது என்பதை உணராத மூடர்கள் எனக் கூறுவது பகுத்தறிவின் உச்சமாகும் (Tamil Priyan, 2014).

## முடிவுரை

திராவிடம் என்ற சொல்லும் அதன் கொள்கைகளும் தனி மனிதனின் உணர்வுகளைக் கீறல் செய்யும் நோக்கங்கொண்டதன்று. அடிமைத்தனத்தையும் அதிகாரக் குவிப்பையும் மூட நம்பிக்கைகளையும் சாடுவதாகும். அத்தகைய தன்மைகள் ஆன்மீகப் பெட்டியில், பகுத்தறிவுச் சுவடியாக, சாதிமத எதிர்ப்புச்சாவியாக, பெண்ணின மதிப்புத்தூவியாக, போலித்துறவிகளின் தோலுரிக்கும் சூரியாக, உடலையும் மனதையும் கொண்டாடும் காவியாக சிவவாக்கியர் இருந்துள்ளமையை அவரின் பாடல்களின் மூலம் அறிய முடிகின்றது.

## References

Bavanidasan, (2015) Ulaga Pothumarai Thirukkural, Reliance Veeliyeedu, Chennai, India.

Kathirvelpillai, N. (2011) Tamil Mozhi Agarathi, Saradha Pathippagam, Chennai, India.

Murugan, (2014) Thirukkural Thiruvukol, New Century Book House, Chennai, India.

Sagadeva Muthaliyar, S. (1997) Kazhaga Tamil Kaiyaragathi, Saradha Pathippagam, Chennai, India.

Seenivasan, P. (2012) Bharathiyar Kavithaikal, Vikadan Press, Chennai, India.

Tamil Priyan, (2014) Siddharpadalkal Moolamum Uraiyum, Karapagam Puthagalayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License